# EASTERN UNIVERSITY, SRI LANKA
## FACULTY OF ARTS AND CULTURE
## THIRD YEAR SECOND SEMESTER SPECIAL DEGREE EXAMINATION IN ECONOMICS (2013/2014 BATCH) 2015 / 2016
## (AUGUST 2018)
## ECS 3213 BASIC ACCOUNTING

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க. **Time: 03 Hours**

---

01. **I.** 2018 ஆடி மாதத்திற்கான குட் லிமிட்டடின் வங்கிக் கூற்று கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | வரவு ரூ. | செலவு ரூ. | மீதி ரூ. |
|---|---|---|---|
| 01.07.2018 மீதி | | | 148,800 |
| வைப்பு | | 500,000 | 648,800 |
| காசோலை (0014) | 470,000 | | 178,800 |
| வைப்பு | | 8,800 | 187,600 |
| காசோலை (0016) | 10,000 | | 177,600 |
| திரும்பிய காசோலை | 7,600 | | 170,000 |
| காசோலை (0018) | 10,000 | | 160,000 |
| நிலையியற் கட்டளை | 2,000 | | 158,000 |
| வங்கிக் கட்டணம் | 200 | | 157,800 |
| 31.07.2018 மீதி | | | 157,800 |

உரிமையாளர் இந்தக் கூற்றினை நாள் குறிப்புகளுடன் ஒத்துப்பார்து கீழே காட்டப்பட்டுள்ள காசோலை மற்றும் வைப்புக்கள் வங்கிக் கூற்றில் காணப்படவில்லையென கணக்காளருக்கு அறிவித்தார்.

காசோலை வழங்கியது ரூ.3,000 மற்றும் ரூ.5,000

காசோலை வைப்பு ரூ. 87,000

ஆடி காசேட்டில் கணக்காளர் தவறுதலாக காசுக் கொடுப்பனவு ரூ.8,800 ஐ காசோலைக் கொடுப்பனவாக பதிவு செய்திருந்ததினைக் கண்டார்.

**வேண்டப்படுவது:**

அ) ஆடி 2018ல் வங்கி கணக்கினை சீராக்கலுக்கு முன்னர் காசேட்டினை தயாரித்துக் காட்டுக. பின்னர் சீராக்கிய காசேட்டினை 31 ஆடி 2018ல் தயாரித்துக் காட்டுக.

ஆ) 31.07.2018ல் உள்ளவாரான வங்கி கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிக்குக.

(15 புள்ளிகள்)

**II.** ரவி நிறுவனத்தின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஆடி மாதத்திற்கா சில்லறைக் கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

1. சில்லறை காசாளனுக்கு ரூ.2,500 முற்பணம் செலுத்தப்பட்டது.
3. போக்குவரத்துச் செலவு ரூ.160
7. முத்திரை செலவு ரூ.80.
8. எழுதுகருவி வாங்கியது ரூ.110.
10. பிரயானச் செலவு ரூ.70.
11. கமலுக்கு கொடுத்தது ரூ.425.
12. முத்திரை செலவு ரூ.120.
13. முத்திரைச் செலவு ரூ.70,
16. காகிதாதி வாங்கியது ரூ.60.
20. பிரையான செலவு ரூ.120.
22. கடித உறை வாங்கியது ரூ.90.
28. எழுதுகருவி வாங்கியது ரூ.170.
30. சில்லறைக்காசாளனது செவுகள் மீள்நிரப்பப்பட்டது.

**வேண்டப்படுவது:**

அ) சில்லறைக் காசேட்டில் பதிவு செய்க.

ஆ) பேரேடுகளை தயாரிக்குக்.

(புள்ளிகள் 1

(மொத்தம் 25 புள்ளிக

**02.** மாலா நிறுவனம் 01.07.2018ல் பின்வரும் மீதிகளுடன் வியாபாரத்தை ஆரம்பித்தது.

| | |
|---|---|
| காசுமீதி | ரூ.40,000 |
| வங்கி மீதி | ரூ.37,500 |
| சரக்கிருப்பு | ரூ.20,000 |
| கடன்பட்டோர் | |
| ரமணன் | ரூ.4500 |
| ரன்ஜன் | ரூ.5,000 |
| கடன்கொடுத்தோர் | |
| கரிஷ்ணன் | ரூ.7,500 |
| கமல் | ரூ.2,500 |
| 10% வங்கிக்கடன் | ரூ.15,000 |
| மோட்டார் வாகனம் | ரூ.60,000 |

ஆடி மாதத்தில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

2. காசோலை மூலம் கொள்வனவு ரூ.8,000, காசுக் கொள்வனவு ரூ.7,500.
5. கரிஷ்ணனிடமிருந்து வாங்கிய பண்டங்கள் ரூ.17,500.
6. கமலிடமிருந்து வாங்கிய பண்டங்கள் ரூ.22,500.

7. காசுக்கு விற்ற பண்டங்கள் ரூ.10,000.
8. காசோலை மூலம் விற்பனை ரூ.12,000 அன்றே வங்கியிலிடப்பட்டது.
10. கரிஷ்ணனுக்கு திருப்பி அனுப்பிய பண்டம் ரூ.2,000.
11. கமலிற்கு திருப்பி அனுப்பிய பண்டம் ரூ.3,000.
12. ரமணனிற்கு விற்பனை ரூ.14,500.
13. ரன்ஜனிற்கு விற்பனை ரூ.16,500.
14. ரமணன், ரன்ஜன் முறையே ரூ.1,500, ரூ.2,500 பெறுமதியான பொருட்களை திருப்பி அனுப்பினார்கள்.
17. கரிஷ்ணன, கமல் இருவரினதும் ஆரம்ப நிலுவைகள் முறையே 5%, 8% கழிவு நீக்கி காசோலையாக செலுத்தப்பட்டது.
20. ரமணன், ரன்ஜன் இருவரினதும் ஆரம்ப நிலுவைக் கடன்களை முறையே 8%, 5% கழிவு நீக்கி காசோலையாக தந்தார்கள்.
22. பெற்ற காசோலைகள் வங்கியிலிடப்பட்டது.
30. ரவியிடம் கொள்வனவு ரூ.2,500.

**வேண்டப்படுவது**

அ. மூல ஏடுகளில் பதிவு செய்க.
ஆ. பேரேடுகளை தயாரிக்குக.
இ. பரீட்சை மீதி தயாரிக்குக.

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

03. சுரேஸ் ஒவ்வொரு வருடமும் 31 ஆடியில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கின்றார். 31 ஆடி 2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான பரீட்சை மீதி பின்வருமாறு.

**பரீட்சை மீதி**

| விபரம் | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|
| காணி கட்டடம் (காணியின் பெறுமதி ரூ.600,000) | 1,250,000 | |
| கட்டட பெறுமான தேய்வு ஏற்பாடு 01.08.2017 | | 108,000 |
| தளபாடம் | 60,000 | |
| தளபாடம் பெறுமான தேய்வு ஏற்பாடு 01.08.2017 | | 23,000 |
| கடன்பட்டோர் | 85,000 | |
| மூலதனம் | | 1,078,150 |
| கொள்வனவு | 526,300 | |
| விற்பனை | | 1,022,400 |
| உட்திருப்பம் | 4,200 | |
| வெளித்திருப்பம் | | 6,600 |
| பெற்ற கழிவு | | 5,500 |

| | | |
|---|---|---|
| கொடுத்த கழிவு | 3,250 | |
| ஆரம்ப இருப்பு | 108,100 | |
| வெளிச்சென்ற வண்டிக்கூலி | 11,500 | |
| வாடகை | 24,000 | |
| தொலைபேசி | 9,500 | |
| சம்பளம் | 65,200 | |
| பெற்றவட்டி | | 3,500 |
| ஏனைய செலவுகள் | 4,200 | |
| கடன்கொடுத்தோர் | | 60,000 |
| வங்கி | 105,000 | |
| வங்கிக் கட்டணம் | 2,500 | |
| எழுதுகருவி | 8,500 | |
| முற்பண காப்புறுதி 01.08.2017 | 2,800 | |
| அட்டுறு எழுதுகருவி 01.08.2017 | | 900 |
| காசு | 38,000 | |
| | **2,308,050** | **2,308,050** |

**மேலதிக தகவல்கள்**

1. இறுதி இருப்பு ரூ.105,300.
2. அட்டுறு எழுதுகருவி 31.07.2018ல் ரூ.1,700 மற்றும் கையிலுள்ள எழுதுகருவி இறுதி இருப்பின் பெறுமதி ரூ.1,300.
3. மாதம் ஒன்றுக்கான வாடகை ரூ.1,500
4. கட்டடத்திற்கு 5% பெறுமானத்தேய்விடல் வேண்டும்.
5. தளபாடத்திற்கு 10% பெறுமானத்தேய்விடல் வேண்டும்.
6. பெறவேண்டிய வட்டி 31.07.2018ல் ரூ.2,000 ஆகும்.

**வேண்டப்படுவது:**

அ) 31 ஆடி 2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான கூற்று

ஆ) 31 ஆடி 2018 இல் உள்ளபடியான நிதிநிலமைக்கூற்று

**(மொத்தம் 25 புள்ளி**

**04. I.** பாடுமீன் விளையாட்டுக் கழகத்தின் புத்தகங்களிலிருந்து பின்வரும் விபரங் பெயர்த்தெடுக்கப்பட்டுள்ளது.

i. 31.03.2018ல் சங்கத்திலுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை 120 ஆ இருப்பதுடன் அங்கத்தவர் ஒருவருக்கான சந்தாக் கட்ட வருடமொன்றிற்கு ரூ.4,000 ஆகும்.

ii. சங்கத்தின் சொத்துக்களும் பொருப்புக்களும்:

| விபரம் | 31.03.2018 ரூ. '000 | 31.03.2017 ரூ. '000 |
|---|---|---|
| நிலுவையிலுள்ள சந்தாக்கள் | 16 | 24 |
| முற்பனமாக பெற்ற சந்தாக்கள் | 18 | 14 |
| விளையாட்டு உபகரணங்கள் | 180 | 160 |
| காணி கட்டம் | 410 | 420 |
| காசு | ? | 60 |

iii. 31.03.2018ல் முடிவடைந்த வருடத்தில் பின்வரும் செலவுக் ஏற்பட்டதுடன் அவை காசாக செலுத்தப்பட்டுள்ளன.

| | ரூ. '000 |
|---|---|
| விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது | 140 |
| மின்சாரம் | 96 |
| காவலாளர் சம்பளம் | 120 |
| மைதான பராமரிப்பு செலவுகள் | 40 |

iv. 31.03.2018ல் முடிவடைந்த வருடத்தில் சங்கத்திற்கு ரூ.300,000 நன்கொடைகள் பெறப்பட்டது.

**வேண்டப்படுவது:**

அ) 01.04.2017ல் உள்ளவாரான திரண்ட நிதி.

ஆ) 31.03.2018ல் கையிலுள்ள காசு.

இ) 31.03.2018ல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான செலவுக் கணக்கு.

ஈ) 31.03.2018ல் உள்ளபடியான நிதி நிலமைக் கூற்று

(15 புள்ளிகள்)

**II.** சந்திரன் நிறுவனத்தின் காணக்கேடுகளிலிருந்து பின்வரும் வழுக்கள் கண்டறியப்பட்டது.

i. விளம்பரக் கட்டணம் செலுத்தியது ரூ.4,460 முற்றாக கணக்குகளில் பதியப்படவில்லை.

ii. மின்சாரம் செலுத்தியது ரூ.10,500 காப்புறுதிக் கணக்கில் பதியப்பட்டுள்ளது.

iii. தளபாடம் திருத்தச் செலவு ரூ.17,800 தளபாடக் கணக்கில் பதியப்படடுள்ளது.

iv. கொடுத்த கழிவு ரூ.670 பெற்ற கழிவுக் கணக்கின் செலவுப் பக்கத்தில் ரூ.670 ஆக பதியப்பட்டது.

v. ஊழியர்களுக்கு கொடுத்த சம்பளம் ரூ.6,800 கணக்குகளில் இரண்டு தடவை பதியப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது:**

மேற்குறிப்பிட்ட வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளை தருக.

(10 புள்ளிக

(மொத்தம் 25 புள்ளி

**05. I.** அலகுசார் மற்றும் அட்டுறு எண்ணக்கரு போன்றவற்றினை விளக்குக.

(புள்ளிகள்

**II.** முகாமையாளர், வங்கி, அரசு, கொள்வனவாளர்கள் மற்றும் போ நிறுவனங்கள் கணக்கீட்டுத் தகவல்களில் ஏன் அக்கரை செலுத்துகின்ற என்பதனை விபரிக்க.

(புள்ளிகள்

**III.** வைகாசி 2018ல் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் வெ நிறுவனத்தில் இடம்பெற்றுள்ளன.

i. மூலதனமாக ரூ.200,000 இட்டு வியாபாரத்தினை ஆரம்பித்தனர்.
ii. கடனுக்கு ரூ.20,000 பெறுமதியான பொருட்கள் கொள்வன செய்யப்பட்டன.
iii. ரூ.25,000 இற்கு பொருட்கள் கடனுக்கு விற்கப்பட்டன. இ பொருட்களின் கிரயம் ரூ.15,000 ஆகும்.
iv. கடன்பட்டோரிடமிருந்து ரூ.21,500 காசு பெறப்பட்டது.
v. ரூ.5,000 கிரயமான பொருட்கள் ரூ.8,000 இற்கு காசுக்கு விற்கப்பட்டது.
vi. ஊழியருக்கான சம்பளமாக ரூ.16,500 செலுத்தப்பட்டது.
vii. கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களில் ரூ.3,000 பெறுமதியானவை விநியோகஸ்தருக்குத் திருப்பியனுப்பட்டன.
viii. மின்சாரக் கட்டணம் செலுத்தியது ரூ.1,250.
ix. சொந்த தேவைக்காக உரிமையாளர் காசாக ரூ.4,000 பற்றியுள்ளார்.
x. களவு போன காசு ரூ.2,300 என காசாளர் கண்டறிந்தார்.

**வேண்டப்படுவது:**

மேற்படி கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் என்பவற்றி கணக்கீட்டுச் சமன்பாட்டில் பதிவு செய்க.

(10 புள்ளிக

(மொத்தம் 25 புள்ளிக